உ
சிவமயம்



# அன்பும் சிவமும் ஒன்று

"அவன் பண் ஓதி அமர்வோர் அவனடி நன்று"

சிவமே செல்வம்
சிவமே சிந்தனை
சிவமே முக்தி
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்.

உ
சிவமயம்

# சைவ இடையூற்றைப் போக்கி மகிழ்க

பல கோணங்களிற் புகழப்பெறுகின்ற உயர்ந்த சிறப்புக்கள் பலவற்றை உடையது நம் சைவசமயம். வரலாற்று ஒழுங்கிற் காலத்துக்குக் காலம் எம் சமயத்துக்குப் பல இடையூறுகள், நெருக்குதல்கள் வந்திருக்கின்றன. அவற்றைப் போக்கி; சைவத்தை நீண்ட – தொடர்ந்த சரித்திரமுடையதாகச் செய்த பெருமை பலருக்கு உண்டு. சிவபாதவிருதயர், மங்கையற் கரசியார், குலச்சிறையார், திருஞானசம்பந்தர், மாணிக்க வாசகர், ஆறுமுகநாவலர் எனச் சைவத்தை நிலைநிறுத்திய பெரியோர்கள் பலர் – பலகாலத்தவர் – பலதரத்தினர் சைவ சரித் திரத்தில் என்றும் நன்றியுடன் கொண்டாடப் பெறுகின்றனர்.

பாண்டி நாட்டிலே, அரசனும், மிகப் பெரும்பான்மை மக்களும் வேற்றுச் சமயத்தை அநுட்டித்தபோது மங்கையற் கரசியாரும், குலச்சிறையாரும், திருஞானசம்பந்தரைத் தம் நாட்டுக்கு அழைத்து; சைவத்தை மேன்மைப்படுத்த முயன் றார்கள். பாண்டிநாட்டை அடைந்த சம்பந்த சுவாமிகள் பாண்டி நாட்டிற் சைவத்தாபனம் செய்யும் வகையில் மூன்று நான்கு திருப்பதிகங்களை அருளிச் சிவபெருமானை வணங்கி, அவர் அருள்பெற்று அங்கு பரந்தெழுந்திருந்த சமண் இருளைப் போக்கிச் சைவ ஒளிபரவி நிலைக்கச் செய்தருளினார். அவற்றுள் ஒரு பதிகம் "வேதவேள்வி என்று தொடங்கும் நாலடி மேல்வைப்பு" என்ற பதிக அமைப்பை உடையது. பாண்டி நாட்டிற்

சைவத்தாபனங்கருதி சம்பந்தர் அருளிய நான்கு பதிகங்களை யேனும், அவற்றுள் ஒன்றாகிய "வேதவேள்வியை" எனத் தொடங்கும் பதிகத்தையேனும் நம் சைவ அன்பர்கள் தினமும் பல தடவையோ, பல தினங்கள் தொடர்ச்சியாகவோ, பலர் கூடியோ பாராயணம் செய்து சிவனருள் பெறுவதன்மூலம்; இக்காலத்திற் சைவசமய ஆலயங்களை அழித்தல் – சைவ ஆலயங்களிலோ அவற்றுக்கு அண்மையிலோ பிற சமய ஆதிக்கத்தை நிலைப்படுத்தல் – சைவசமய அறிவற்ற ஏழைகள் – நோயாளர்களை மதம் மாற்றல் போன்ற செயல்களைத் தடுத்து நிறுத்தி மகிழலாம்.

இப்பதிகத்தில் நாலடிமேல் வைப்பாக "ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென் ஆலவாயில் உறையும் எம் ஆதியே" என்ற வேண்டுதல் அமைந்திருக்கின்றது. இதில் ஞாலம் நின்புகழே மிக வேண்டும். என்பதற்கு ஞாலத்தில் நின்புகழே மிகவேண்டும் என்று விளங்குவதிலும் பார்க்க; "ஞாலத்துக்கு நின்புகழே மிக வேண்டும்" என விளங்குவது நன்று.

அதாவது; ஞாலத்துக்கு நின்புகழே மிகுந்து தேவை. சிவன்புகழாகிய சைவசமயம் உலகில் வேறெந்தச் சமயத்தையும் இகழ்ந்து; தான் சிறக்க நினைக்காத பெருந்தன்மை உடையது. பிறசமயங்களோவென்றால் உலகில் தம் சமயம் தவிர வேறு சமயம் இருக்கலாகாது – சிறக்கலாகாது என்று நம்புவன. இப்படியான குறுகிய நம்பிக்கை அற்ற சைவ சமயமாகிய சிவபெருமானின் புகழ்மிகுவது ஞாலத்துக்கு – இந்த

உலகத்துக்குப் பெருநன்மை பயக்கும் என்பதை நம்மவரும் பிறரும் அறிதல் அவசியம்.

இது மட்டுமின்றி; இப்பதிகப் பாராயணத்தை ஓரிருவர் ஓரிருமுறை செய்வது போதாது .பலர் பலமுறை, பல நாட்கள்,பல இடங்களில் தொடர்ந்து செய்வதாலேயே இறையருளைப் பெற முடியும்.

சாதாரணமாக; சத்துணவை ஓரிருமுறை உண்பது – உடற்பயிற்சியை ஓரிருமுறை செய்வது – பட்டப்படிப்புக்கான கல்வியை ஓரிருமுறை கற்பது என்பவற்றால் எவ்வித பயனும் உண்டாகாமைபோல; தேவாரப் பதிக பாராயணத்தையும் ஓரிருமுறை செய்வதால் எம் தேவை நிறைவுறாது என்ற அறிவுடன் சைவமக்கள் செயற்படுவார்களாக.

**தி. பொன்னம்பலவாணர்**

*பொன்னாலை அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயம்*

**திருஞானசம்பந்தப் பெருமானார் வேத வேள்வியைச் செய்யும் வைதிகக் கவுணியர் கோத்திரத்தில் தோன்றியவர். நான்மறை ஆறங்கம் பயின்ற வித்தகர். தாம் மறை பயின்றவர். ஆனாலும், சிவனடியைப் பரவச் செந்தமிழை, மறை இலங்கு தமிழை, தவம்மல்கு தமிழையே தேர்ந் தெடுத்து சிவப்பேறு பெற்றதாக திருவாய் மலர்ந்துள்ளதை அறியலாம்.**

உ
சிவமயம்

# எடுக்கின்ற வேலைகள் இனிதே முடியப் பாராயணம் செய்யவேண்டிய பதிகம்

திரு ஆலவாயில் சமணர்களுடன் வாதிடுவதற்குச் சம்பந்தப்பெருமான் புறப்படும்பொழுது, சொக்கநாதப் பெருமானிடம் சென்று வணங்கிப் பாடியருளிய பதிகமாகும் இப்பதிகம்.

தான் மேற்கொள்ளப்போகும் காரியம் எளிதே, இனிதே முடிந்திட ஆண்டவனின் அருளை வேண்டிநிற்கும் பதிகமாகும். தொழில், வியாபாரம், மற்றும் எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் சரி, இப் பதிகத்தைப் பக்தியுடன் பாராயணம் செய்யவேண்டும். அந்தக் காரியம் இனிதே முடியும் என்பது பலர்கண் அனுபவ உண்மையாகும்.

இப்பதிகத்தைப் பாடியபின், சம்பந்தர் சமணர்களுடன் போட்டியிட்டு (அனல் வாதம், புனல் வாதம்) வெற்றிபெற்றதை நாம் யாவரும் அறிந்ததே ஆகும்.

**சிவ. ஆ. பக்தவச்சலம்**
*சிவனடியார் திருக்கூட்டம்*

**சம்பந்தர் காலத்தில் தமிழர்களும் ஆலயங்களில் அர்ச்சனை செய்யும் தொண்டில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்று சம்பந்தரே மூன்றாம் திருமுறையில், திருவீழிமிழலைப் பதிகத்தில் அருளியுள்ளார்.**

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

தலம் : திருஆலவாய் பண்: பழம்பஞ்சுரம்

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதமில்லி அமணொடு தேரரை
வாதில்வென்றழிக் கத்திருவுள்ளமே
பாதி மாதுடனாய பரமனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. (1)

வைதிகத்தின் வழியொழு காதவக்
கைத வம்முடைக் காரமண் தேரரை
எய்தி வாதுசெ யத்திருவுள்ளமே
மைதி கழ்தரு மாமணி கண்டனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. (2)

மறைவ ழக்கமி லாதமா பாவிகள்
பறித லைக்கையர் பாயுடுப் பார்களை
முறிய வாதுசெ யத்திருவுள்ளமே
மறியு லாங்கையில் மாமழு வாளனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. (3)

அறுத்த அங்கம் ஆறு ஆயின நீர்மையைக்
கறுத்த வாழ் அமண் கையர்கள் தம்மொடும்
செறுத்து வாதுசெ யத்திரு வுள்ளமே
முறித்த வாண்மதிக் கண்ணி முதல்வனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே (4)

அந்தணாளர் புரியும் அருமறை
சிந்தை செய்யா அருகர் திறங்களைச்
சிந்த வாதுசெ யத்திரு வுள்ளமே
வெந்த நீற தணியும் விகிர்தனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே (5)

வேட்டு வேள்விசெ யும்பொரு ளைவிளி
மூட்டு சிந்தை முருட்டமண் குண்டரை
ஓட்டி வாதுசெயத்திரு வுள்ளமே
காட்டிலானை உரித்தகங் கள்வனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. (6)

அழலது ஓம்பும் அருமறை யோர்திறம்
விழல தென்னு மருகர் திறத்திறம்
கழல வாதுசெ யத்திரு வுள்ளமே
தழலி லங்கு திருவுருச் சைவனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. (7)

நீற்று மேனிய ராயினர் மேலுற்ற
காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரைத்
தேற்றி வாதுசெ யத்திரு வுள்ளமே
ஆற்ற வாள ரக்கற்கும் அருளினாய்
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. (8)

நீல மேனி அமணர் திறத்துநின்
சீலம் வாதுசெ யத்திரு வுள்ளமே
மாலும் நான்முக னுங்காண் பரியதோர்
கோல மேனிய தாகிய குன்றமே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. (9)

அன்று முப்புரம் செற்ற அழகநின்
துன்று பொற்கழல் பேணா அருகரைத்
தென்ற வாதுசெ யத்திரு வுள்ளமே
கன்று சாக்கியர் காணாத் தலைவனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. (10)

கூடல் ஆலவாய்க் கோனை விடை கொண்டு
வாடல்மேனி அமணரை வாட்டிட
மாடக் காழிச்சம் பந்தன் மதித்த இப்
பாடல் வல்லவர் பாக்கிய வாளரே.

திருச்சிற்றம்பலம்

⌘⌘⌘

உ
சிவமயம்
**ஓர் சிவமயர்**

தென்னாட்டு மக்களின் மாதவப் பயனால் இறைவனே அடியார்கள் மூலமாக அருளியவையே இப்பன்னிரு திருமுறைகளும். இதை அப்பரடிகள் என்று பாராட்டப்படும் திருநாவுக்கரசு சுவாமிகள்.

"பத்திமையால் பணிந்து அடியேன் தன்னைப் பன்னாள்
பாமாலை பாடப் பயில்வித்தானை"

என்று கூறுவதால் உய்த்துணரலாம். இறைவர் திருநாவுக்கரசு சுவாமிகளைச் சூலைநோய் கொடுத்து ஆட்கொண்டு தமிழ்வேதப் பாக்களைப் பாடும்படி அருள்வசப்படுத்தினார்.

மூன்று வயதில் திருஞானசம்பந்தர் பாடினார் எனில், இறையருள் அல்லவா பாடும் ஆற்றலை உகந்தது. சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு அடியெடுத்துக் கொடுத்தும், பொன்முடிப்புத் தந்தும், வீடுதோறும் இரந்து உண வளித்தும், தூதுசென்றும் தமிழில் பாடும்படிச் செய்தருளியது தெய்வத் திருவருள்தானே!

மணிவாசகப் பெருமானுக்குக் குருவாய் வந்து உபதேசத்தை அளித்து, அதன்மூலம் உண்மையை உணர்த்தி "திருவாசகம்" பாடத் திருவுளங்கொண்டு அப்பாடல்களைத் தாமே கேட்டருளியதும் இறைவனே அல்லவா?

சேரமான் பெருமான் கயிலாயத்தில் அருளிய "திருக்கைலாய ஞான உலா" இம்மண்ணுகிற்குக் கிடைக்கும்படி செய்ததும் முழுமுதற் பொருளே அல்லவா?

"உலகெலாம்" என்று அடியெடுத்து உதவி சேக்கிழார் பெருமானைப் பெரியபுராணம் பாடவைத்து ஆட்கொண்டவர் சிவபெருமானே ஆகும்.

1. தமிழ் வேதங்களாகிய திருமுறைகள் இறைவனால் அவனடி யார்கள் மூலம் அருளப்பட்டவை.

2. தமிழ் வேதங்களாகிய தேவாரத் திருமுறைகள், இறைவனால் விரும்பிக் கேட்கப்பட்டவை.

3. தமிழ் வேதங்களாகிய தேவாரத் திருமுறைகளை விரும்பியே இறைவன் பொற்காசு கொடுத்தார்.

4. தமிழ் வேதங்களாகிய தேவாரத் திருமுறைகளால் பெற முடியாத பேறுகள் உலகில் யாதுமில்லை.

5. தமிழ் வேதங்களாகிய தேவாரத் திருமுறைகளால் பெற முடியாத பேறுகளை வேறு எம்முறையினாலும் பெறவே முடியாது.

சிவ . ஆ. பக்தவச்சலம்
*சிவனடியார் திருக்கூட்டம்,*
*குடியேற்றம் (வ.ஆ.மா.)*

"தமிழே சிவபெருமான் சிவபெருமானே தமிழ்"

*"பண்ணும் பதம் ஏழும் பலவோசைத் தமிழ் அவையும்*
*விண்ணும் முழுதானன் இடம் வீழிமிழலையே."*

- திருஞானசம்பந்தர்

*பண்ணாய், பதம் ஏழாய் (ச, ரி, க, ம, ப, த, நி)*
*பலவோசைத் தமிழாய் இருப்பவர் சிவபெருமான்.*